# ஆதார அடையாள அட்டை என்னும் ஆபத்து

அ. மார்க்ஸ்

ஹோப் நிறுவனம்

*மனை எண். 106, எம். ஜி. ஆர். நகர்*

*100 அடி சாலை, புதுச்சேரி - 605 004*

*தொலைபேசி: 91.413 .2266741*

### முன்னுரை

## ஆதார் அடையாள அட்டை இந்தியாவுக்குத் தேவையா?

*இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனும், அரசின் கண்காணிப்பிற்குள் கொண்டுவரப்படுகிறான்,*

*சட்டத்தால் தேடப்பட்டுவரும் பெரிய அரசியல்வாதிகளும், தலைமறைவாகியுள்ள பெரும் தொழிலதிபர்களும், மேல்மட்ட அரசு அலுவலர்களும் உடனடியாக கண்டறியப்பட்டு, நீத்யின் கீழ் கொண்டு வரப்படுவர் என நம்பினால் நீங்கள் ஏமாந்து போவீர்கள்.*

*ஸ்டெர்லிங் ட்ரீமேக்னம், ஈஸ்வரி பைனான்ஸ், ஸ்நேகம் பைனான்ஸ், பி.என்.எல்.நிறுவனம் என்று நடத்தி மக்கள் பணத்தை மோசடி செய்த ஏமாற்றுக்காரர்கள், இதே பெயரிலோ, வேறு பெயரிலோ, வேறு வர்த்தகம் செய்ய முற்பட்டால் உடனே அரசு கண்டறிந்து தடுத்துவிடும் என நம்பினால் நீங்கள் ஏமாந்து போவீர்கள்.*

*14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் தொழிற்சாலைகளிலோ, உணவகங்களிலோ, வாகனப் பணிமனைகளிலோ பணியில் இருந்தால், உடனே அருகிலுள்ள தொழிலாளர்துறை அலுவலத்தில் அலாரம் அடிக்கும். உடனே தொழிலாளர்துறை அலுவலர்கள் விரைந்து வந்து குழந்தைகளை மீட்டு மறுவாழ்வுக்கு ஏற்பாடு செய்வார்கள். தொழிலதிபர்களும் உரிமையாளர்களும் தண்டிக்கப்படுவார்கள் என நீங்கள் நம்பினால் ஏமாந்து போவீர்கள்.*

*இவை அனைத்தும் தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமே. அடித்தட்டு மக்கள் மேல் அக்கறையுள்ள அரசால் செய்யக்கூடியவைதான். ஆனால் பொது மக்களுடைய நலனை குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அரசியல்வாதிகள், உள்நாட்டு தொழிலதிபர்கள், பன்னாட்டு நிறுவனங்களின் நலனைத் தூக்கிப்பிடிக்கும் அரசு இத்தகைய செயல்பாடுகளை செய்யாது.*

*மாறாக, மக்கள் போராட்டங்களை ஊக்குவிக்கும், நடத்தும் சமூக செயல்பாட்டாளர்கள் உடனே கண்டறியப்பட்டு கைது செய்யப்படுவர். அரசு அலுவலரை, அரசியல்வாதியை எதிர்க்கும் தனிநபர்கள் உடனே கண்டறியப்பட்டு பழிவாங்கப்படுவர். அவர்கள் தங்கள் அடையாளத்தையே இழந்து அல்லல்படும் நிலைக்கும் தள்ளப்படலாம்.*

*உயர்மட்ட காவல் அலுவலர்களின் சபலப் பார்வையில் விழும் சிறுமிகள் எவ்வாறு அல்லல்படுவார்கள் என்று இப்போதே பார்க்கிறோம். பொதுமக்களின் ஒவ்வொரு நடமாட்டத்தையும்*

*கண்காணிக்கும் ஆற்றல் இத்தகைய காவல்துறையின் கையில் கிடைத்தால் என்ன நடக்கும்.*

*சொந்தக் காசில் சூனியம் வைத்துக் கொள்வது என்று கிராமங்களில் சொல்லக் கேள்விப்பட்டுள்ளோம். நம்முடைய வரிப்பணத்தில் ரூ. 7000 கோடியை செலவழித்து நமக்கு சூனியம் வைக்க முயற்சி நடக்கிறது.*

*சனநாயகத்திலும், மக்கள் உரிமையிலும் நம்பிக்கை உள்ள அனைவரும் எதிர்க்க வேண்டிய திட்டம் இது.*

**பெ. ஜோசப் விக்டர் ராஜ்**
தேசிய இணை செயலர்
இந்தியச் சமூகச் செயல்பாட்டுப் பேரவை(INSAF)

# முன்னுரை

*கண்விழி, கைரேகைகள் உள்ளிட்ட அங்கக அடையாளங்கள் பதியப்பெற்ற அடையாள அட்டைகளை*(Unique Identity Card - UID) *வழங்குவதைத் தனது உடனடித் திட்டங்களில் ஒன்றாக மைய அரசு அறிவித்துப் பணியைத் துவங்கியுள்ளது.*

*தமிழகத்தில் பதவி ஏற்றுள்ள ஜெயலலிதா அரசின் எதிர்காலத் திட்டங்களில் ஒன்றாக சமூக நல உதவிகள் அனைத்தும் இத்தகைய அடையாள அட்டைகளின் அடிப்படையிலேயே வழங்கப்படும் என ஆளுநர் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பெருஞ் செலவுக்குக் காரணமாகப் போகிற இத்திட்டம் மக்களின் அந்தரங்கங்கள் அனைத்தையும் அரசின் அறிதலுக்கும் கண்காணிப்பிற்கும் உட்படுத்துகிற ஒரு முயற்சி. இதன் மூலம் அரசு அறிவிக்கும் எந்தப் பயன்களும் சாத்தியமில்லை. சிக்கனம் என்கிற பெயரில் சமூக நலத் திட்டங்களின் பயனாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும், அவர்களுக்கு மேலும் பல இடர்களை ஏற்படுத்துவதற்கும் மட்டுமே இது இட்டுச் செல்லும் என சமூக நலனில் அக்கறையுள்ள பலரும் எச்சரிக்கின்றனர்.*

*இத்தகைய ஆதார அடையாள அட்டைத் திட்டத்திற்கு எதிராக இந்தியாவில் பிற மாநிலங்களில் ஏற்பட்டுள்ள அளவிற்கு தமிழகத்தில் விழிப்புணர்வு ஏற்படவில்லை. ஆனால் இது நடைமுறைக்கு வரும் என ஆளுநர் உரையில் அறிவிக்கப் பட்டுள்ளது. அடித்தள மக்களின்பால் அக்கறையுள்ள அரசியல் கட்சிகள் இது குறித்த ஆபத்துக்களை உணர்ந்ததாகத் தெரியவில்லை.*

*இது குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் எதிர்ப்பு இயக்கம் ஒன்றைத் கட்டுவதும் இன்றைய உடனடித் தேவைகளாக இருக்கின்றன.*

*புதுச்சேரியிலிருந்து செயல்படும் 'ஹோப்' என்னும் தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய கருத்தரங்கொன்றில் நான் பேசிய இவ்வுரை பின்பு 'மக்கள் களம்' இதழில் இரு மாதங்கள் தொடராக வந்தது.*

*இதனை இன்று அந்நிறுவனமே வெளியிட முன் வந்துள்ளனர். அவர்களுக்கு நன்றி.*

*சென்னை-20* **அ. மார்க்ஸ்**
*07-06-2011*

இன்னும் கொஞ்ச நாளில் உங்கள் கழுத்துகளில் ஒரு அட்டையைத் தொங்கவிடப் போகிறார்கள். அதில் உங்களுக்கு ஒரு எண் இருக்கும். இனி அந்த எண்தான் உங்களுக்கு அடையாளம். இந்தியாவிற்குள் நீங்கள் எந்த அலுவலகத்திற்குப் போனாலும் அந்த எண்ணைச் சொன்னால்தான் காரியம் நடக்கும். அந்த எண் இல்லாவிட்டால் நியாய விலைக் கடையில் உங்களுக்கான உணவுப் பொருட்களைத் தரமாட்டார்கள். ஏதேனும் ஒரு விவகாரத்தில் காவல் நிலையம் செல்ல நேர்ந்தால் உளவுத்துறை அதிகாரியின் விரல் நுனி அங்குள்ள கணினியின் 'மவுஸ் பட்டனை' ஒருமுறை அமுக்கினால் நீங்கள் யார் உங்கள் வங்கிக் கணக்கை என்ன மாதிரிப் பயன்படுத்தியுள்ளீர்கள் என்றைக்கெல்லாம் ரயிலிலும், விமானத்திலும் பயணம் செய்திருக்கிறீர்கள், எந்தெந்த நாடுகளுக்குப் போயிருக்கிறீர்கள், உங்கள் சொத்து விவரம் என்ன உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் இப்படியாக அனைத்து அந்தரங்கங்களும் திரையில் பொல பொலவெனக் கொட்டும். அந்த எண்ணைச் சொல்ல இயலாவிட்டால் நீங்கள் கம்பி எண்ணவும் நேரலாம்.

மிகையில்லை, எல்லாம் உண்மை. விரைவில் நனவாகப் போகும் உண்மை. நமது அதிநவீன அமெரிக்க விசுவாசி மன்மோகனின் கனவுத் திட்டங்களில் ஒன்று இது. இதற்கும் பெயர் "ஆதார அடையாள அட்டை (UID - Unique Identity Card)" . உங்களுக்கு கொடுக்கப்படப் போகிற எண்ணின் பெயர் 'ஆதார் நம்பர்' அதாவது ஆதார எண். இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கென "இந்திய ஆதார அடையாளப்படுத்தலுக்கான அதிகார அமைப்பு" (Unique Identification Authority of India) என்றொரு நிறுவனம் உருவாக்கப்பட்டு அதன் தலைவராக 'இன்ஃபோசிஸ்' அமைப்பின் இணைத் தலைவராக இருந்த நந்தன் நீய்ல்கெனி நியமிக்கப்பட்டுள்ளார். பலகோடி ரூபாய் வருமானத்தை விட்டுவிட்டு அவர் இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளார். "இந்தியாவைக் கற்பனை செய்தல் : புதிய நூற்றாண்டுக்கான சிந்தனைகள்" என்றொரு நூலை எழுதியவர்

இவர். நியாயவிலைக் கடைகளை ஒழித்தல் முதலான மன்மோகனுக்குப் பிடித்தமான பல புரட்சிகரச் சிந்தனைகளை இந்நூலில் காணலாம்.

எப்படி இதை நிறைவேற்றப்போகிறார்கள்? இந்தியா முழுவதும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் 600ஐத் தேர்வு செய்து இதற்கான அதிகாரம் வழங்கப்போகிறார்கள். நாம் அங்கே போய் நமது பெயர், முகவரி, பிறந்தேதி பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் விவரங்கள் மற்றும் அவர்களின் ஆதார எண்கள் முதலான விவரங்களைச் சொல்ல வேண்டும். அவர்கள் உங்களைத் துல்லியமாகப் புகைப்படம் எடுப்பார்கள். அதிநுட்பக் கருவிகளைக் கொண்டு உங்களின் பத்து விரல் ரேகைகளும் பதிவு செய்யப்படும்; உங்கள் விழித்திரை ‘ஸ்கேன்’ செய்து பதிந்து கொள்ளப்படும். ரேகைகள், விழி ஸ்கேன் என்கிற இரு “அங்கக அளவுகோல்கள்” (Bio-Metrics) இப்படியாக அரசின் தகவல் தொகுப்புகளின் ஓரங்கமாகிவிடும்.

பின் அந்த நிறுவனம் இந்தத் தகவல்களை “மத்திய அடையாளத் தகவல்களின் சேமகத்திற்கு” (Central Indentities Data Repositary) அனுப்புவார்கள். அங்கே சக்திவாய்ந்த கணினியில் இவை பதிவு செய்யப்பட்டு உங்களுக்கு ஒரு எண் ஒதுக்கப்படும். அது விரைவு அஞ்சலில் உங்களுக்கு அனுப்பப்படும். கடிதத்துடன் ஒட்டப்பட்டுள்ள அட்டையைக் கிழித்து வைத்துக் கொண்டீர்களானால் அதுதான் உங்கள் ‘ஆதார அடையாள அட்டை’.

உங்களிடம் ஏற்கனவே வருமான வரித்துறையின் ‘பேன் அட்டை’ (Pan Card) தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள புகைப்பட அடையாள அட்டை, பன்நோக்கு தேசிய அடையாள அட்டை, ஓட்டுநர் உரிம அட்டை, குடும்ப அட்டை, மகாத்மா காந்தி தேசிய கிராமப்புறவேலை வாய்ப்புத் திட்ட அட்டை, ஊழியர் வைப்புத் தொகை அட்டை என ஏகப்பட்ட அட்டைகள் இருந்தாலும் இதுவே ஆதார அட்டை. கொஞ்சம் கொஞ்சமாகப் பிறஅட்டைகளெல்லாம் ஒழிக்கப்பட்டு இந்த அட்டை மட்டுமே இறுதியாக நிலைக்கும். ஒற்றைச் சாளர அமைப்பாக இது அமையும்.

சரி, இதிலென்ன பிரச்சினை. இப்படியான ஒரு அடையாள அட்டை இருப்பது நல்லதுதானே என்றுதான் மத்திய வர்க்க மனநிலைக்குத் தோன்றும். ஆழச் சிந்திக்கும் போதுதான் இதன் ஆபத்துகள் விளங்கும். இவற்றை விளங்கிக் கொள்ள நாம் இத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிற வேறு சில திட்டங்களைக் கவனிக்க வேண்டும்.

“தேசிய மக்கள் தொகைப் பதிவேடு” (National Population Register) ஒன்றை உருவாக்கும் பணி இத்துடன் இணையாக மேற்கொள்ளப்படுகிறது. சென்ற மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு (Budget) அறிக்கையில் ஆதார அடையாள அட்டைச் செலவுக்கென ரூ.1900 கோடியும் மக்கள் தொகைப் பதிவேட்டிற்கென 3539.24 கோடியும் ஒதுக்கப்பட்டன. எந்த அரசியல் கட்சியும் இதற்கு எதிராக ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஆக எல்லோரது ஒப்புதலுடனுமே இது செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதி இந்த ஆண்டுச் செலவுக்கு மட்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மக்கள் தொகைப் பதிவேடு ஒன்றை உருவாக்குவதும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்வதும் (Census) வேறு வேறு என்பது மனங்கொள்ளத் தக்கது.

‘சென்சஸ்’ என்பது ஒவ்வொரு பத்தாண்டுக்கும் எடுக்கவேண்டிய ஒரு அரசியல் சட்டக் கடமை. ‘1948ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின்படி’ இது மேற்கொள்ளப்படுகிறது. ஒட்டுமொத்தமாக மக்களின் விவரங்களைச் சேகரித்து, இன்ன மதத்தினர் இத்தனை எண்ணிக்கை உள்ளனர், இவ்வளவுபேர் குடிசைகளில் வசிக்கின்றனர், இவ்வளவு பேர் அரசு வேலைகளில் உள்ளனர், இந்த மாவட்டத்தில் இவ்வளவு மக்கள் வாழ்கின்றனர் என்கிற மாதிரியில் ஒட்டு மொத்தமான விவரப்பட்டியல் (Profile) தயாரிப்பது மட்டுமே இதன் பணி. தனி நபர் விவரத்தொகுப்பை யாரும் பெற இயலாது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது ஒருவர் சொல்லிய எந்தத் தகவலையும் நீதிமன்றச் சாட்சியமாகவும் ஏற்பதில்லை.

தேசிய மக்கள் தொகைப் பதிவேடு என்பது ‘1995ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம்’ மற்றும் ‘2003ஆம் ஆண்டு குடியுரிமை (குடியுரிமைப் பதிவு மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்கல்) விதிகள்’ ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இங்கொன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். தேசிய அளவில் அடையாள அட்டை வழங்க வேண்டும் என்பது பா.ஜ.க. தலைமையிலிருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) அரசின் திட்டமாகவே தொடங்கியது. கார்கில் போரை ஒட்டி அதன் காரணங்களை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை (2000) மற்றும் அதனடிப்படையிலான மத்திய அமைச்சுக்குழு (GoM) அறிக்கை (2001) ஆகியவற்றின் பின்னணியில் தேசிய அளவிலான குடியுரிமைப் பதிவேடு ஒன்றை உருவாக்க பா.ஜ.க. அரசு திட்டமிட்டது. பா.ஜ.க.வின் முக்கிய

கொள்கைகளில் ஒன்றான அந்நிய (குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் வங்கதேச முஸ்லிம்கள்) ஊடுருவலைத் தடுப்பது என்கிற நோக்கில் அவர்கள் இதைச் செய்தனர். முன்னாள் உளவுத் துறைத் (IB) தலைவர் ஏ.கே. டோவல், "அந்நியர்களையும் குடிமக்களல்லாதவர்களையும் களை எடுப்பதற்காகவே இது அப்போது கொண்டுவரப்பட்டது" எனக் கூறியுள்ளது இதற்கொரு நிரூபணம். இதற்காக 1955ம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தில் இருந்த குடிமக்களின் அந்தரங்கத்தை பாதுகாத்திட விதிகள் எல்லாவற்றையும் நீக்கி 2003ம் ஆண்டு குடியுரிமை விதிகளை உருவாக்கியது பா.ஜ.க. அரசு.

ஆக, பா.ஜ.க.வைப் பொருத்தமட்டில் இத்தகைய தேசிய அளவிலான அடையாள அட்டை வழங்குதலுக்கு, 'பாதுகாப்பு' (security) தொடர்பான காரணம் முன்நிலைப்படுத்தப்பட்டது. அந்த அடிப்படையில் "பல்நோக்கு தேசிய அடையாள அட்டை" (MPNID) வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது.

மீண்டும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) அரசு ஆட்சிக்கு வந்தபோது மன்மோகன்சிங் - சோனியா கும்பல் பா.ஜ.க. அரசு ஏற்படுத்திய வழி விலக்கங்கள் பலவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டதை நாம் அறிவோம். பா.ஜ.க. அரசின் திட்டத்தில் இல்லாத அங்கக அடையாளங்களைப் (பயோ மெட்ரிக்ஸ்) பதிவு செய்தல் என்பதையும் இணைத்து இப்போது ஆதார அடையாள எண் வழங்கும் திட்டமாக அது மாற்றப்பட்டது. மன்மோகன் அரசு இதன் நோக்கமாகப் 'பாதுகாப்பு' என்பதைச் சொல்லாமல் 'வளர்ச்சி' (Development) என்பதை முன் வைக்கிறது. அதாவது வளர்ச்சித் திட்டங்களையும் செலவுகளையும் இன்னும் திறனுடன் (Efficiency) செயல்படுத்த இது உதவுமாம். இது குறித்துச் சற்று விரிவாகப் பின்னர் பார்ப்போம்.

இன்று துரிதகதியில் மேற்கொள்ளப்படும் இன்னொரு பணி "தேசிய உளவு வலை அமைவு" ஒன்றை உருவாக்குதல். இதை "நாட்க்ரிட்" (Natgrid - National Intelligence Grid) என்கின்றனர். 'ரா' 'ஐபி', அமலாக்கப் பிரிவு - சி.பி.ஐ, என்.ஐ.ஏ, வருவாய் உளவு இயக்கம் போதைப்பொருட்கள் கட்டுப்பாட்டு மையம் முதலான புலனாய்வு அமைப்புகளை இணைத்து 21 வகைத் தகவல்களை அவை ஒவ்வொன்றிற்கும் கிடைக்கச் செய்கிற அமைப்பு இது. ரயில் மற்றும் விமானப் பயணங்கள், வருமானவரி, தொலைபேசி அழைப்புகள், வங்கிப் பரிவர்த்தனைகள், கிரெடிட் கார்ட் பரிவர்த்தனைகள், விசா, இம்மிக்ரேஷன், சொத்து ஆவணங்கள், ஓட்டுநர் உரிமங்கள் முதலான தகவல்கள் இதிலடக்கம்.

இந்த ‘நாட்க்ரிட்’ அமைவு ஆதார அடையாள எண்ணுடன் ஒருங்கிணைக்கப்படும்போது என்ன ஆகும்? சற்றுமுன் சொன்னதுபோல ‘மவுஸ்’ ஒன்றின் வலப்புறக் குமிழை ஒரு உளவுத்துறை அதிகாரியின் விரல் அமுக்கினால் உங்களின் அந்தரங்கங்கள் எல்லாம் பொல பொலவென உதிரும். நமது உளவுத் துறையினரின் வக்கிர மனங்கள் இதை எப்படி எல்லாம் பயன்படுத்தும் என்பதைச் சற்று யோசியுங்கள்.

உளவுத் துறையினர் தவறாகப் பயன்படுத்துவது ஒருபுறம் இருக்கட்டும், ஆதார அடையாளம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ள உஷா ராமநாதன் சொல்வதுபோல என்னுடைய இருப்பிடம், நான் யாருடன் வாழ்கிறேன், எதற்காகச் செலவு செய்கிறேன், எங்கெங்கே போய் வந்தேன், யாருடன் என்ன பேசினேன் என்பதை எல்லாம் அரசு தெரிந்து கொள்வது எனக்கு எத்தனை பெரிய அவமானம்?

அந்தரங்கம் புனிதமானது. நம் ஒவ்வொருவருக்கும் பல அந்தரங்கங்கள் இருக்கும். எவற்றை எவரிடம் சொல்வது என்பது நமது தேர்வு, நமது விருப்பு. ஒரு மருத்துவரிடம் நாம் சொல்வதை வருமானவரி அதிகாரியிடம் சொல்லாமல் இருக்கலாம், ஒரு வக்கீலிடம் சொல்வதை மருத்துவரிடம் சொல்லாமலிருக்கலாம். நமது தகவல்கள் பலவும் இப்போதும் அரசுத் துறைகளிடம் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவை வெவ்வேறு துறைகளில் தனித்தனிப் பேழைகளில் (Silos) பொதிந்துள்ளன. நமது பயண விவரங்கள் வருமான வரித்துறையிடம் இருக்காது. வருமான வரித்துறையிடம் நமக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்கிற விவரம் இருக்காது. ஆனால் இனி எல்லா விவரங்களும் எல்லார் கைகளிலும் இருக்கும். பல்வேறு தகவல் பேழைகளையும் இணைக்கும் பாலமாக நமது ஆதார எண் அமையப் போகிறது.

மேலும் மேலும் அதிகாரத்துவமும், பாதுகாப்பு குறித்தான சொல்லாடலும் வலுவாகியுள்ள நிலையில் இந்த ஆதார எண் ஆயுதம் அத்துடன் இணைவது மேலும் கவலைக்குரிய ஒன்று.

இனி, இவ்வட்டை வளர்ச்சிக்குப் பயன்படும் என்கிற மன்மோகனின் வாய்ச்சவடாலில் ஏதும் உண்மையுண்டா? மன்மோகனின் குறிக்கோள்களில் ஒன்று பொது விநியோக முறையை (PDS) ஒழித்துக் கட்டுவது, பதிலாக அமெரிக்காவில் உள்ளது போல ‘நிபந்தனைக்குட்பட்ட பணமாற்றறீட்டு முறை’யைக் (Conditional Cash Trasfer) கொண்டு வருவது. அதாவது நியாய விலைக் கடைகளை ஒழித்துவிட்டு வறுமைக் கோட்டுக்குக்

கீழே உள்ளவர்களுக்கு உதவித் தொகையாக ‘உணவு முத்திரைகளை’ (Food Stamps) வழங்குவது இந்த உணவு முத்திரைகளை அவர்கள் சாதாரண கடைகளில் கொடுத்து பொருட்களை வாங்கிக் கொள்ள வேண்டும். அதேபோல இலவசக் கல்வியை ஒழித்துவிட்டு பதிலாக ஏழை மாணவர்களுக்குப் ‘பள்ளி வவுச்சர்களை’ (School Vouchers) வழங்குவது இன்னொரு திட்டம். கட்டணத்திற்குப் பதிலாக இந்த வவுச்சர்களை பள்ளி நிர்வாகத்திடம் மாணவர்கள் தருவார்கள். நிர்வாகம் அதை அரசு வங்கியில் பணமாக மாற்றிக் கொள்ளும். அதேபோல கர்ப்பிணிப் பெண்கள், ஆதரவற்ற முதியோர் ஆகியோருக்கு அவர்களது வங்கிக் கணக்கில் மாதந்தோறும் பணம் போடுவது அடுத்த திட்டம் இவ்வாறு உணவுப் பொருட்களை வாங்கிச் சேமித்து நியாயவிலைக் கடைகளின் வழியாக அத்தியாவசியப் பொருட்களைக் குறைந்த விலையில் மக்களுக்குக் கொடுப்பது என்பதை ஒழித்துக் கட்டுவது முதலான பண மாற்றுத் திட்டங்களை ஏகமாகப் புகழ்ந்து தனது நூலில் நீய்ல்கெனி எழுதியிருந்தததுதான் மன்மோகனுக்கு அவரைப் பிடித்துப் போனது. திட்ட ஆணையமும் (Planning Commision) உணவு முத்திரைகளை வழங்குவது, ஆதார எண்ணுடன் இதை இணைப்பது பற்றியெல்லாம் இப்போது அடிக்கடி பேசி வருவதைக் கவனிக்க.

பொது விநியோக முறையை அடியோடு ஒழித்துக் கட்டினால் கடும் எதிர்ப்பு வரும் என்பதால்தான் மன்மோகன் அரசு முதற்கட்டமாக அதை ‘இலக்கு நோக்கிய பொது வினியோக முறையாக” (Targetted Public Distribution System) மாற்றியது. அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே, மேலே எனப் பிரித்து இரு வண்ணங்களில் குடும்ப அட்டைகளை வழங்கி, கீழே உள்ளவர்களுக்கு மட்டும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது. வறுமைக்கோடு தொடர்பான வரையறையில் செய்யப்பட்டுள்ள ஊழல்கள், இதன் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வேண்டிய பெரும்பகுதியினருக்கு அது மறுக்கப்படுவது குறித்தெல்லாம் நான் விரிவாக எழுதியுள்ளேன் (பார்க்க: உலக மயத்திற்குப் பின் இந்தியா). அர்ஜுன் சென்குப்தா அறிக்கையின்படி இந்த நாட்டில் 80 சத மக்களின் ஒரு நாளைய செலவு 20 ரூபாய்க்கும் குறைவு என்கிறபோது இதில் ஒரு பகுதியினரை வறுமைக் கோட்டுக்கு மேல் என ஒதுக்குவது எத்தனை அபத்தம்.

2010 ஜுலை 24 அன்று நடைபெற்ற ‘தேசியப் பாதுகாப்புக் குழு’ (NDC) கூட்டத்தில் மன்மோகன்சிங் பேசும்போது, “வரும்

*ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு இலக்கு நோக்கிய மானியங்களை* (Targetted Subsidies) *நாம் குறைத்தாக வேண்டும். இதைத் திறனுடன் செயல்படுத்துவதற்கு ஆதார அடையாள அட்டை முறை உதவும்" எனக் கூறியது குறிப்பிடத்தக்கது. 'இலக்காக்கப்படும் பிரிவினைத்' துல்லியமாக அடையாளம் காண இது உதவுமாம்.*

*அதெப்படி? என்ன சொல்கிறார்கள் இவர்கள்? நந்தன் நீய்ல் கெனியும் இவ்வாறு பொது விநியோக முறையை ஆதார அடையாள முறைவாயிலாகத் திறனடையதாக்குவதால் ஏற்படும் லாபம் இந்த அட்டை வழங்கலுக்காகச் செலவிடப்படும் தொகையைக் காட்டிலும் அதிகம் என்று கூறுவதன் பொருளென்ன? அதாவது இப்போது ஏகப்பட்ட பேர் ஏமாற்றி இரண்டு மூன்று அட்டைகளை வைத்திருக்கிறார்களாம். ஆதார எண் கொடுக்கப்பட்டால் அது சாத்தியமில்லையாம்.*

*அதாவது ஆதார அட்டை முறை இரட்டை அடையாளத்தை* (Duplicity) *ஒழித்து விடுமாம். இது எந்த அளவிற்குச் சாத்தியம் என்பது ஒருபுறமிருக்க, பிரச்சினை அதுவல்ல. தமிழகத்தைப் பொருத்தமட்டில் இவ்வாறு இரட்டை அட்டை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை வெறும் 2 சதந்தான் என ஒரு கணக்கீடு சொல்கிறது. தவிரவும் முப்பரிமாண முத்திரை* (Hologram) *ஒன்றை குடும்ப அட்டையில் பதிப்பதன் மூலம் இந்த இரட்டை அட்டை ஏமாற்றத்தை எட்டு சத அளவு சட்டிஸ்கார் மாநிலத்தில் குறைத்துள்ளனர் என இன்னொரு தகவல் கூறுகிறது, எளிய தொழில் நுட்பங்கள் மூலம் சாத்தியப்படும் வாய்ப்பிருக்க ஏன் இந்த உயர் தொழில் நுட்ப அடையாள அட்டை? பிரச்சினை ஏற்கனவே வழங்கப்பட்டவர்களின் சிலரை ஒதுக்குவதல்ல. வழங்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பலரை உள்ளடக்குவதுதான்.*

*மன்மோகன் - நீய்ல்கெனியின் திட்டம் படிப்படியாக நியாயவிலைக் கடைகளையும் பொதுவிநியோக முறையையும் ஊற்றி மூடுவதுதான். உணவு முத்திரை மற்றும் ஸ்கூல் வவுச்சர் முறைகளைக் கொண்டு வருவதுதான். இவை பொது விநியோக முறைக்கும் இலவசக் கல்விக்கும் மாற்றாக முடியாது. பொது விநியோக முறையிலுள்ள ஊழல்களைக் குறைத்து அதைச் சிறப்பாகச் செயல்படுத்துவதே தீர்வாக முடியும். ஆனால் 'இலக்கு மானியங்களைக் குறைப்பதுதான்' தன் நோக்கம் என்பதை மன்மோகன் வெளிப்படையாகவே சொன்னது நினைவிற்குரியது.*

ஆதார எண்ணை வழங்குவதற்கு ஆதரவாக அரசு சொல்கிற வாதங்களில் இரண்டைப் பார்த்தோம். முதலில் வளர்ச்சி நடவடிக்கைகளைச் செம்மையாகவும் திறனுடனும் நடத்துவதற்குப் பயன்படும் என்பது எத்தனை அபத்தம் என்பதைக் கண்டோம். உண்மையிலேயே ஊழலை ஒழிக்கவும் திறனை மேம்படுத்தவும் வேண்டுமானால் இருக்கிற எளிய தொழில்நுட்பங்களைக் கொண்டே அதைச் செய்ய முடியும். சென்ற அக்டோபர் 1, 2010 அன்று கிராமப்புற வளர்ச்சி அமைச்சகம் மகாத்மாகாந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் தொடர்பான சேவை ஒன்றுக்காக 2162கோடி ரூபாய் மதிப்புள்ள ‘டெண்டர்’ அறிவிப்பு ஒன்றைப் பத்திரிகைளில் வெளியிட்டது. ‘பொதுத்துறை - தனியார்துறை கூட்டு’ என்கிற அடிப்படையில் இந்த விளம்பரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஜி.பி.எஸ். சிக்னலைப் பயன்படுத்தி ஆதார அடையாள அட்டை மற்றும் அங்கக அடையாள முறை அடிப்படையில் வருகைப் பதிவைச் செய்வதற்கான சேவை தொடர்பான விளம்பரம் இது.

நிகில்டே, அருணாராய், ஜயதிகோஷ், கமல் மித்ர செனாய், ராமகுமார் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான அறிஞர்கள் இதைக் கண்டித்து அறிக்கை ஒன்று வெளியிட்டனர். ஊரக வேலைத் திட்ட அட்டையை வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே அந்த வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது என அறிவோம். 2006ல் வழங்கப்பட்ட அட்டைகள் 2011ல் காலாவதியாகின்றன. அதைப் புதுப்பிக்க வேண்டிய நிலையில் இனி ஆதார அட்டைதான் செல்லுபடியாகும். அந்த அடிப்படையிலேயே வருகைப் பதிவு செய்ய வேண்டும் என்று ஆதார அட்டையை மறைமுகமாக ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை நம்பி வாழ்பவர்கள் மீது திணிக்கும் திட்டம் இது. இன்னும் ஆதார எண் அட்டையே கொடுக்கத் தொடங்காதபோது, தொடங்கிப்பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் எல்லா வாக்காளர்களுக்கும் புகைப்பட அடையாள அட்டையையே கொடுத்து முடிக்காத போது இப்படியான ஒரு நிபந்தனையை உருவாக்குவது அப்பாவி கிராம மக்களுக்கு எத்தனை பிரச்சினைகளை உருவாக்கும்?

தவிரவும் கடைக்கோடி கிராமங்களில் மேற்கொள்ளப்படுகிற இப்பணியிடங்களில் ஜி.பி.எஸ் சிக்னல் எல்லாம் எப்போதும்

*வலுவாகக் கிடைக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? பல கிராமங்களில் செல்ஃபோனே வேலை செய்வதில்லை என்பதை நாம் அறிவோம்.*

*ஊழலை ஒழிக்க வேறு எத்தனையோ எளிய வழிகள் உண்டு. ராஜஸ்தான் மாநிலத்தில் சுவர்களில் இத்திட்டத்தில் பங்கேற்கிறவர்களின் பெயர்களை எழுதி அவர்களுக்கு வழங்கப்பட்ட வேலை விவரங்களையும் வெளியிருக்கின்றனர். தகவல்கள் இவ்வாறு வெளிப்படையாக்கப்படும்போது ஊழல் குறைகிறது. தமிழகத்தில் ஒவ்வொரு நாளும் வேலைக்கு வந்திருப்பவர்களின் எண்ணிக்கை உடனடியாக தலைமையகத்திற்கு எஸ்.எம்.எஸ். 'குறுஞ்செய்தி' மூலம் தெரிவிக்கப்படுகிறது. திடீர் சோதனை செய்து அவ்வப்போது இந்த எண்ணிக்கை உறுதி செய்யப்படுவதன் மூலம் 'ஓரளவு மஸ்டர் ரோல்' ஊழல் குறைந்திருப்பதாகச் சொல்கின்றனர்.*

*எந்தத் தொழில்நுட்பமும் வெளிப்படைத் தன்மையைக் குறைக்கும்போது அதை ஏற்க முடியாது.*

*பயோமெட்ரிக் அடையாள அட்டை எந்த வகையிலும் வளர்ச்சிக்கு உதவுவதற்கு வாய்ப்பில்லை. பலரது வாய்ப்புகளைக் குறைப்பதற்கு மட்டுமே அது வழிவகுக்கும்.*

*பயங்கரவாதத்தையும் எல்லை தாண்டிய ஊடுருவலையும் ஒழித்து பாதுகாப்பை மிகுதிப்படுத்த ஆதார அட்டை பயன்படும் என்பதும் அபத்தமே. ஆறுமாதம் இந்தியப் பகுதியில் தங்கியுள்ள யாரும் ஆதார எண்ணிற்கு விண்ணப்பம் வாங்கிவிட இயலும் என்கிறபோது 'பயங்கரவாதிகள்' இதை வாங்கிவிட இயலாதா? எல்லை தாண்டிய ஊடுருவலை எல்லையோரப் பாதுகாப்பை வலுப்படுத்துவதால் மட்டுமே சாத்தியமாக்க முடியும். பயங்கரவாதத்தை அரசியல் தீர்வுகள் மூலமாகவே ஒழிக்க இயலும். ஆதார அட்டைகள், பயோமெட்ரிக் பதிவுகள் என்பன ஒவ்வொரு மனிதரையும் குற்றவாளியாக்கிக் கண்காணிப்பை* (Surveilance) *மேற்கொள்ள மட்டுமே பயன்படும். ஏழை எளியவர்கள், நிரந்தர வதிவிடமற்றவர்கள் குறிப்பிட்ட சமூகத்தினர் ஆகியோர் குற்றவாளிகளாக்கப்படுவதிலேயே இது முடியும். உளவுத்துறையிடம் கட்டற்ற அதிகாரம் குவிவதற்கு இது இட்டுச்செல்லும்.*

ஆதார எண் வைத்திருப்பவர்கள் நாட்டில் எங்கு வேண்டுமானாலும் பொது விநியோக முறையைப் பயன்படுத்திக் கொள்ளலாம், புலம்பெயர் ஊழியர்களுக்கு (Migrant workers) இது ஒரு வரப்பிரசாதம் என அரசு சொல்கிறது. இதுவும் முழுப் பொய்யே. எந்த ஒரு நியாய விலைக் கடைக்கும் அதற்குரிய சேவைப் பரப்பு வரையறுக்கப்பட்ட ஒன்று. அதற்குள் உள்ள அட்டைகளின் எண்ணிக்கைக்குத் தகவே அந்தக் கடைக்குரிய பொருள்கள் வழங்கப்படுகின்றன. புதிதாகத் திடீர் திடீரென வருகிறவர்களுக்கெல்லாம் நியாயவிலைக் கடையில் பொருட்களைத் தருவதில் பல சிக்கல்கள் ஏற்படும். தவிரவும் மாநிலத்திற்கு மாநிலம் ரேஷன் அளவு, விலை வேறுபாடு முதலியனவும் நடைமுறையிலுள்ளது. எனவே அரசு சொல்வதுபோல ஆதார அட்டை, பொதுவிநியோக முறையில் பொருத்தமட்டில் எங்கும் பயன்படுத்தக் கூடியது (portable) அல்ல.

தொழில் நுட்ப ரீதியாக எந்த அளவிற்கு இது சாத்தியம் என்பதும் ஐயத்திற்குரிய ஒன்றே. டோனிபிளேயர் அரசு பிரிட்டனில் இதை அமலாக்க முயற்சித்தபோது புகழ்மிக்க நிறுவனமான ‘லண்டன் பொருளாதாரப் பள்ளி’ (London School of Economics) இதன் சாத்தியப்பாடு, விளைவுகள், செலவு ஆகியன குறித்து மிக விரிவான ஆய்வொன்றைத் செய்தது. “இந்தத் திட்டத்தைச் செயல்படுத்து வதற்கென தேர்வு செய்துள்ள தொழில்நுட்பம் நம்பத் தகுந்ததல்ல, இதற்குமுன் சோதித்துப் பார்க்கப்பட்டதுமல்ல. இந்த அளவிற்குப் பெரிய அளவிலான திட்டம் உலகில் வேறெங்கும் செயல்படுத்தப் பட்டதில்லை. இதைக் காட்டிலும் சிறிய, இத்தனை பெரிய எதிர்பார்ப்புகள் எல்லாம் இல்லாத பல திட்டங்களே தொழில்நுட்பச் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளபோது தேசிய அளவில் இதைச் செயல்படுத்தும்போது இந்தச் சிக்கல்கள் பன்மடங்கு அதிகரிக்கும்” என்று அந்த அறிக்கை கூறியது. நமது மக்கள் தொகையைக் காட்டிலும் 20 மடங்கு குறைவான மக்கள் தொகை உள்ள பிரிட்டனிலேயே இது சாத்தியமில்லை என்கிறபோது என்ன தைரியத்தில் தொழில்நுட்பப் பிரச்சினை ஏதுமில்லை என்கிறார் நீய்ல்கெனி?

'பயோமெட்ரிக் தரக்குழு'வின் கூற்றுப்படி நூறுகோடியைத் தாண்டிய தகவல்களை எல்லாம் ஒன்றை ஒன்று வேறுபடுத்தி அடையாளப்படுத்த முடியும் என்பதெல்லாம் இதுவரை சோதிக்கப்பட்டதில்லை. 15 கோடி வரை மட்டுமே இவ்வாறு இதுவரை வேறுபடுத்தித் தகவல் காக்கப்பட்டுள்ளது என அறிகிறோம். தவிரவும் நமது நாட்டில் பெரும்பான்மையோர் உடலுழைப்பாளிகள். இவர்களது கைரேகைகளை எல்லாம் எந்த அளவிற்கு அழியாமல் துல்லியமாகப் பதிவுசெய்ய இயலும் என்கிற கேள்வியையும் வல்லுனர்கள் எழுப்புகின்றனர். பார்வையற்றவர்கள் இங்கே எட்டு கோடிப்பேர் உள்ளனர். அவர்களுக்கு விழி 'ஸ்கேனும்' பயன்படாது. குழந்தைகளைப் பொருத்தமட்டில் அவர்கள் வளரும் வரை இவ்விரு அங்கக அடையாளங்களும் (பயோமெட்ரிக்களும்) மாறிக் கொண்டே இருக்கும். இப்படிப் பல பிரச்சனைகளுக்கும் பதிலில்லை.

கரன்தபார் இது குறித்து நீய்ல்கனியிடம் திருப்பித் திருப்பிக் கேட்டபோது தற்போதைக்குத் தொழில்நுட்பம் இல்லை, ஆனால் இருக்கிற தொழில்நுட்பத்திலிருந்து புதிதாக உருவாக்க முடியும் என்றுதான் அவரால் பதில் கூற முடிந்தது.

அதேபேட்டியில் இது குறித்த செலவுகள் குறித்தும் தெளிவான மதிப்பீடு தங்களுக்கு இல்லை என்பதை நீய்ல்கனி ஒத்துக்கொள்கிறார். மேற்குறித்த லண்டன் பொருளாதாரப் பள்ளி ஆய்வின்படி பிரிட்டனுக்கு இதைச் செய்து முடிக்க 10லிருந்து 20 மில்லியன் யூரோக்கள் ஆகும். இருபது மடங்கு அதிக மக்கள் தொகையுள்ள நமது நாட்டிற்கு இந்தக் கணக்குப்படி 1.5 லட்சம் கோடி ரூபாய் ஆகலாம். அவ்வளவெல்லாம் ஆகாது என்றுதான் நீய்ல்கனி சொல்கிறாரேயொழிய எவ்வளவு ஆகும் எனச் சொல்ல இயலவில்லை. எந்த ஒரு திட்டத்தையும் தொடங்குமுன் செலவு - பயன் (cost-benefit) ஆய்வு செய்தே தொடங்க வேண்டும். அப்படியான எந்தக் கணிப்புமின்றி தொடங்கப்பட்டுள்ள ஒரு அபத்த முயற்சி இது என்பது குறிப்பிடத்தக்கது.

ரகசியம் காக்கப்படுவதற்கும் எந்த உத்தரவாதமும் கிடையாது. சென்சஸ் சட்டப்படி (1948) தனிநபர் தகவல்களை யாருக்கும் தரமுடியாது. ஆனால் இன்று தயாரிக்கப்படக்கூடிய மக்கள் தொகைப்பதிவேடு 2003ம் ஆண்டில் திருத்தப்பட்ட குடியுரிமை விதிகளின்படி மேற்கொள்ளப்படுகிறது என்பதை

முன்பே குறிப்பிட்டுள்ளேன். 1955ம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்திலுள்ள தனிநபர் அந்தரங்கம் காக்கப்படுவது தொடர்பான விதிகளைத் திருத்தி உருவாக்கப்பட்டதே 2003ம் ஆண்டு குடியுரிமை விதிகள். தனிநபர் தகவல்களை உளவு நிறுவனம் உள்ளிட்ட எந்த ஒரு நிறுவனத்திற்கும் தரக்கூடிய வகையில் பா.ஜ.க. அரசால் உருவாக்கப்பட்ட இந்தத் திருத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் உருவாக்கப்படும் இந்தப் பதிவேடு பயோமெட்ரிக் ஆதாரஎண் மற்றும் 'நாட்க்ரிட்' முதலானவற்றுடன் இணைக்கப்படும்போது தனிநபர் அந்தரங்கத்திற்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாமற் போவது முன்பே விளக்கப்பட்டுள்ளது.

தவிரவும் எந்தத் தகவலையும், எல்லா எலக்ட்ரானிக் பாதுகாப்புகளையும் மீறித் திருடிவிட முடியும் (hack) என்பது இன்று விக்கி லீக்கிலிருந்து ரேடியா டேப் வரை நிரூபணமாகியுள்ளது. லண்டன் பொருளாதாரப் பள்ளி ஆய்விலும் இத்தகைய தகவல் திருட்டு ஆபத்து குறித்த எச்சரிக்கை இருந்தது. நமது தகவல்கள் இவ்வாறு திருடப்படும்போது நாமெல்லோரும் ரத்தன் டாடா போல உச்சநீதிமன்றத்திற்குச் சென்று நீதி கோரிக் கொண்டிருக்க இயலாது. தவிரவும் புதிதாக இயற்றப்பட்டுள்ள 'தேசிய அடையாள அதிகார அமைப்பு மசோதா' (NIDAI Bill) படி இந்த அதிகார அமைப்பு 'மத்திய அடையாளத் தகவல் சேமகத்தின்' நிர்வாகப் பொறுப்பை எந்த நிறுவனத்திற்கும் கையளிக்கலாம் (சட்டப்பிரிவு 7). தனது சொந்த அதிகாரத்தின் சில அம்சங்களைப் பயன்படுத்தவும் (பிரிவு 51) அனுமதிக்கலாம் என்கிறபோது தனிநபர் அந்தரங்கம் காக்கப்படுவதற்கு எந்த உத்தரவாதமுமில்லை.

அடையாள அட்டை வாங்குவது கட்டாயமில்லை, வேண்டுமென்றால் பதிவு செய்துகொள்ளலாம் இல்லாவிட்டால் விட்டுவிடலாம் என அரசு சொல்வதும் மக்கள் காதில் பூச் சுற்றுகிற வேலைதான். ஊரக வேலைத் திட்டமாகட்டும், பொது விநியோக முறையாகட்டும் எல்லாவற்றிற்கும் ஆதார எண் நிபந்தனையாக்கப்படும்போது அது கட்டாயமில்லாமல் வேறென்ன? ஜீன் ட்ரெஸ் சொல்வதுபோல ஊரிலுள்ள நீர் நிலைகளை எல்லாம் விஷமாக்கிவிட்டு மக்கள் விரும்பி மினரல் வாட்டர் பாட்டில்களை வாங்கிப் பருகுகின்றனர் எனச் சொல்வது எப்படியோ அப்படித்தான் மக்களே விரும்பி ஆதார அடையாள அட்டையைப் பெறுகிறார்கள் எனச் சொல்வதும்.

ஆக அரசு சொல்கிற அத்தனையும் பொய்யே.

வறுமை பற்றியும், பொது விநியோக முறையைப் பற்றியும் ஒன்றும் தெரியாத நீய்ல்கனி 'நாட்க்ரிட்' வலையமைவை உருவாக்கிக் கொண்டிருக்கும் கேப்டன் ரகுராமன் ஆகிய கொடூரர்களால் உருவாக்கப்படுகிற திட்டம் இது. மஹிந்திரா சிறப்புச் சேவைக் குழுவைச் சேர்ந்த கேப்டன் ரகுராமன் சமீபத்தில் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில், "அதிகரித்து வருகிற பொருளாதார ஏற்றத் தாழ்வு கெட்டித்து வைக்கப்பட்ட வெடிமருந்துக் கிடங்கைப்போல உள்ளது. எந்த நேரமும் வெடித்துச் சிதறலாம். உள்நாட்டுப் பாதுகாப்பை கார்ப்பரேட்கள் கையிலெடுத்துக் கொள்ள வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. தனியார் பாதுகாப்புப் படை உட்பட உருவாக்கிக் கொண்டால்தான் நமது வணிக சாம்ராஜ்யத்தைக் காப்பாற்ற இயலும்" என எழுதினான். இதே வார்த்தைகளை நாம் எழுதியிருந்தால் இந்நேரம் 'மாவோயிஸ்டுகள்' என்கிற முத்திரையுடன் கம்பி எண்ணிக் கொண்டிருந்திருக்க நேரிட்டிருக்கும்.

சற்றுமுன் குறிப்பிட்ட புதிதாய் உருவாகி விடும் அடையாள அட்டை அதிகார மசோதா (நீடாய் மசோதா) மூலம் சகல அதிகாரங்களும் இந்த நிறுவனத்திடம் (தேசிய அடையாள அதிகார அமைப்பு - NIDAI)குவிக்கப்படுகிறது. உங்கள் விவரத்தில் ஏதும் தவறுகள் இருந்தால் அதை நீங்கள் திருத்துவது எளிதல்ல. தவறு குறித்து முறையிட மட்டுமே செல்ல இயலும். அதை விசாரித்து தேவையான திருத்தம் செய்வது அதிகார அமைப்பின் உரிமை. நீங்கள் வற்புறுத்திக் கோர முடியாது. இது தொடர்பான எந்த வழக்குகளையும், அது இந்த 'நீடாய்' அதிகார அமைப்பால் தொடுக்கப்பட்டிருந்தாலொழிய விசாரிக்க நீதிமன்றங்களுக்கு அதிகாரமில்லை. ஆதார அட்டைக்கென எத்தகைய பயோமெட்ரிக் அலகுகளைத் தேர்வு செய்வது, எத்தகைய தரவுகளைக் கோருவது என்பவற்றை இந்த அதிகார அமைப்பே தீர்மானிக்கும் (பிரிவு 23). ஆதார எண்ணிற்கான பலன்கள், சேவைகள் முதலியவற்றையும்கூட அதுவே தீர்மானிக்கும். குடிமக்களுக்கு எந்த அதிகாரமுமில்லாத ஒரு அமைப்பு இது. இந்த மசோதா குறித்து இதுவரை எந்த அரசியல் கட்சியும் வாய் திறவாதது வருந்தத் தக்கது.

மொத்தத்தில் இந்த ஆதார எண் வழங்கும் திட்டம் யாருக்கு லாபமானது? அரசுக்கும், உளவுத் துறைக்கும், கணினித் தொழில்

*கார்ப்பரேட்களுக்கும் மட்டுமே. (1.5 லட்சம் கோடித் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது)*

*யாருக்கு இழப்பு? மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு.*

*பொது விநியோக முறையைக் குழி தோண்டிப் புதைத்து நிபந்தனைக்குரிய பண மாற்றீடுத் திட்டங்களின் மூலம் நியாய விலைக் கடைகள், இலவசங்கள் எல்லாவற்றையும் ஊத்தி மூடி அரசு தன் பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கும் திட்டம் இது.*

*ஒவ்வொரு குடிமகனையும், குடிமகளையும் பாதுகாப்பிற்கு ஆபத்தானவராகக் கருதி அரசின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரும் சதி இது.*

*குடி மக்களின் அந்தரங்கங்களைக் கூவி விற்கும் கொடிய நோக்கம் இதன் பின்னே உள்ளது.*

*அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் கடும் எதிர்ப்பின் விளைவாகக் கைவிடப்பட்ட திட்டம் இது. பிரிட்டனில் காமரூன் அரசு ஆட்சிக்கு வந்தவுடன், ''மக்களின் அந்தரங்கத்தில் தலையிடுவது, நச்சரித்துத் தொல்லையளிப்பது''* (intrusive and bullying) *எனச் சொல்லித் தூக்கி எறிந்த திட்டம் இது.*

*இது வெறும் 'ஸ்மார்ட் கார்ட்' அல்லது தேசிய அடையாள அட்டை அல்ல. மாறாக அங்கக அடையாளங்கள் (பயோமெட்ரிக்ஸ்) இணைக்கப்பட்ட ஒன்று.*

*குடிமக்களின் அந்தரங்கம், சுயமரியாதை, கல்வி மற்றும் உணவு முதலான அடிப்படை உரிமைகள், எந்நேரமும் கண்காணிக்கப் படாதிருக்கும் சுதந்திரம் ஆகிய எல்லாவற்றிலும் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் எதிர்க்க வேண்டிய திட்டம் இது.*

*நம் ஒவ்வொருவருக்கும் பன்முகப் பரிமாணங்கள் உண்டு. பல அடையாளங்களுண்டு. அரசாங்கம் நம் மீது சுமத்தும் ஒரு எண்ணைக் கொண்டு இவற்றை அழித்துக் கொள்ளாதிருப்போம்.*

# ஆதார் அடையாள அட்டை கருத்தரங்கம்

இந்திய சமூக செயல்பாட்டுப் பேரவையின் புதுவைக் கிளை சார்பாக 'ஆதார் அடையாள அட்டை இந்தியாவுக்கு தேவையா?' எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

பேரவையின் மாநில அமைப்பாளர் மோகனசுந்தரம் தலைமை தாங்க, தேசிய செயற்குழு உறுப்பினர் மேரி வரவேற்றார். தொடக்கவுரை ஆற்றிய எட்வின், ஆதார் அடையாள அட்டைக்காக திரட்டப்படும் தகவல்கள் ரகசியமாக வைக்கப்படும் என்று சொல்லப்படுகிறது; ஆனால் அரசு அலுவலகங்களில் பல ரகசிய ஆவணங்கள் சில ஆயிரம் ரூபாய்களுக்கு கைமாறியுள்ளன என்பதை நமது அனுபவம் சொல்கிறது. பிரிட்டன் போன்ற நாடுகளே கைவிட்ட இத்தகைய அடையாள அட்டை திட்டத்தை இந்தியா செயல்படுத்த முனைந்துள்ளது துரதிர்ஷ்ட வசமானது என்று குறிப்பிட்டார்.

சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் மார்க்ஸ், அரசுத்திட்டங்கள் முழுமையாக மக்களை சென்றடைய இந்த அட்டை வழங்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், கடவு சீட்டு, வறுமைக் கோட்டுக்கு கீழுள்ளவர் என்று பல்வேறு அடையாள அட்டைகள் உள்ளன. இப்போது ஆதார் அடையாள அட்டை பெற்று விட்டால் மட்டும் ஒருவருக்கு வங்கியில் கடன் கிடைத்து விடுமா? மக்களை கண்காணிக்கவும், மக்கள் போராட்டங்களை ஒடுக்கவுமே இத்தகைய அட்டை பயன்படும் என்று கூறினார்.

மேலும், தமிழர் தேசிய இயக்கம் இரா. அழகிரி, மீனவர் விடுதலை வேங்கைகள் மங்கையர்செல்வன், மக்கள் சிவில் உரிமை கூட்டமைப்பு அபிமன்னன், மக்கள் உரிமை கூட்டமைப்பு சுகுமாரன், ஒருங்கிணைந்த உள்ளாட்சி அமைப்புகளின் கூட்டமைப்பு ஜெகநாதன், தமுமுக அஷ்ரப், பழங்குடியின மக்கள் கூட்டமைப்பு ராம்குமார், மனித உரிமைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு கழக முருகானந்தம், பூவுலகின் நண்பர்கள் சீனு. தமிழ்மணி, செம்படுகை நன்னீரகம் ராமமூர்த்தி, அம்பேத்கர் பேரவை திருமால் உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர். இந்திய சமூக செயல்பாட்டுப் பேரவையின் மாநில ஆதார நிறுவனமான ரைஸ் நிறுவன ரோச் விக்டர் நன்றி கூறினார்.

இந்திய சமூக செயல்பாட்டுப் பேரவையின் தேசிய இணை செயலர் ஜோசப் விக்டர் ராஜ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

**ஹோப் நிறுவனம்**


ஒருங்கிணைந்த அடையாள அட்டை
இந்தியாவுக்குத் தேவையா?
கருத்தரங்கம்


ஒருங்கிணைந்த அடையாள அட்டை
இந்தியாவுக்குத் தேவையா?